தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

நகராட்சியில் அனுமதி பெற்ற வாகனம்
ராஜா 24 HOUR SERVICE
செப்டிக் டேங்க்
கிளீனிங் சர்வீஸ்
குறைந்த செலவில்
சுத்தம் செய்து தருகிறோம்

63748 77947, 81480 84081

Vol: 02 | Issue: 262 | 4 Pages | 20.4.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 262 | 4 பக்கங்கள் | 20.4.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்**
**ஆற்றல் தலைப்பட் டவர்க்கு**

**விளக்கம்:**
தவம் செய்வதால் பெறத்தக்க ஆற்றலைப் பெற்றவர்க்கு (ஓர் இடையூறும் இல்லையாகையால்) எமனை வெல்லுதலும் கைகூடும்.

# சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பு ஜனநாயக விரோத சக்திகளை உலுக்கி உள்ளது மு.க.ஸ்டாலின்

சென்னை, ஏப்.20

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்தனது எக்ஸ்வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

அரசியலமைப்புச் சட்டத்தை நாம் ஏற்றுக்கொண்டு 75 ஆண்டுகள் கடந்துவிட்டன.

எதிர்க்கட்சி ஆளும் மாநில அரசுகளைச் சிதைத்து, பொது விவாதத்தில் வலதுசாரி கருத்துகளைத் திணிக்க முற்படும் தற்போதைய தீங்கானது, கவர்னர்கள், துணை ஜனாதிபதி, அவ்வளவு ஏன் மாண்புமிகு ஜனாதிபதி உட்பட அரசியலமைப்புப் பதவிகளை அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதில் இருந்து முளைத்த ஒன்றாகும்.

யாரும் எவ்வளவு உயர்ந்தவர்களாக இருந்தாலும் சட்டத்திற்கு அப்பாற்பட்டு இருக்க முடியாது. ஜனநாயகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் அரசாங்கங்கள் நடத்தப்பட வேண்டும். சம்பிரதாயத் தி ற் க ா க நியமிக்கப்படுபவர்களால் அரசு நடத்தப்படக்கூடாது. இதையே நமது சுப்ரீம்கோர்ட்டும் சுட்டிக்காட்டி உள்ளது,



வரலாற்றுச் சிறப்புமிக்க அத்தீர்ப்பு தவறான வழிமுறையைச் சரிசெய்யும் நகர்வாகும். ஆகவே, இந்த வ ர வே ற் க த் த கு ந் த சீர்திருத்தநடவடிக்கைபல ஜனநாயக விரோத சக்திகளை உலுக்கி உள்ளதை புரிந்துகொள்ள முடிகிறது. தற்போதைய தேவை என்பது, இந்த சீர்திருத்தம் முழுமையாக நடைமுறைத்தப்படுவதை உறுதி செய்வதே!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கனடாவில் துப்பாக்கி சூடு: இந்திய மாணவி பலி



ஒட்டாவா, ஏப்.20

கனடாவில் உள்ள ஆண்டாரியோ மாகாணம் ஹமில்டன் நகரில் உள்ள மொஹ்வாக் கல்லூரியில் இந்தியாவை சேர்ந்த ஹர்சிம்ரத் ராதாவா (வயது 21) என்ற மாணவி கல்வி பயின்று வந்தார்.

இந்நிலையில், ஹர்சிம்ரத் நேற்று இரவு 7.30 மணியளவில் சவுத் பெண்ட் சாலையில் பஸ்சுக்காக காத்திருந்தார். அப்போது, அங்கு இரு கார்களில் வந்த நபர்களுக்கு இடையே துப்பாக்கி சண்டைநடைபெற்றது.இருதரப்பினரும் சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினர்

அப்போது எதிர்பாராத விதமாக பஸ்சுக்கு காத்திருந்த இந்திய மாணவி ஹர்சிம்ரத் ராதாவா மீது துப்பாக்கி குண்டு பாய்ந்தது. இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த ஹர்சிம்ரத்தை மீட்ட அங்கிருந்தவர்கள் மருத்துவமனையில் அனுமத்தனர். மருத்துவமனையில் ஹர்சிம்ரத்திற்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இந்த சம்பவம்குறித்துவழக்குப்பதிவுசெய்தபோலீசார்,துப்பாக்கிசுடுநடத்திவிட்டு காரில் தப்பியோடிய நபர்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் 12 கிலோ கஞ்சா பறிமுதல்



சென்னை, ஏப்.20

சென்னை எழும்பூர் ரெயில் நிலைய நடைமேடை 1ல் நேற்று கேட்பாரற்ற நிலையில் பை கிடந்தது. இதனால் சந்தேகமடைந்த ஆர்.பி.எப். போலீசார் அந்த பையை சோதனை செய்தனர். அப்போது, அந்த பையில் 12 கிலோ கஞ்சா இருந்தது.

இதையடுத்து, கஞ்சாவை பறிமுதல் செய்த ஆர்.பி.எப் போலீசார் அதை போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீசில் ஒப்படைத்தனர். பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவின் மதிப்பு 6 லட்ச ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த சம்பவம் குறித்து எழும்பூர் ரெயில்வே போலீசார்விசாரணைநடத்தி வருகின்றனர்.

## ஏமன் துறைமுகம் மீது அமெரிக்கா கடுமையாக தாக்குதல்; 74 பேர் பலி



சனா, ஏப்.20

இஸ்ரேல் மீது கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ந்தேதி ஹமாஸ் அமைப்பு கொடூர தாக்குதல் நடத்தியது. ஆயிரக்கணக்கானோரை கொன்று குவித்தும், நூற்றுக்கணக்கானோரை பணய கைதிகளாக சிறை பிடித்தும் சென்றது. இதற்கு பதிலடியாக, காசாவைஇலக்காககொண்டுஇஸ்ரேல் தாக்குதல் நடத்தியதில், 51 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் பலியாகி உள்ளனர். 1.16 லட்சத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்து உள்ளனர்.

இந்நிலையில், பாலஸ்தீனிய மக்களுக்கு ஆதரவாக, ஹவுதி பயங்கரவாத அமைப்பு செயல்படுகிறது. இஸ்ரேல் மீது தாக்குதலை தொடுத்து வருகிறது. செங்கடலில் கப்பல்களை மறித்து, தாக்குதலை நடத்தி வருகிறது.


இந்நிலையில், ஹவுதி பயங்கரவாதிகளை கட்டுப்படுத்தும் நோக்கில் அமெரிக்கா கடுமையாக தாக்கி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, ஏமனில் உள்ள ராஸ் இசா துறைமுகம் மீது அமெரிக்கா கடுமையாக தாக்குதல் நடத்தியது. இதில், 74 பேர் உயிரிழந்தனர். 171 பேர் காயமடைந்தனர்.

ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி பயங்கரவாதிகளுக்கு எரிபொருள் மற்றும் வருவாய் கொடுக்க கூடிய விசயங்களை அழிப்பது என்று அமெரிக்கா முடிவு செய்து, இந்த தாக்குதலை நடத்தியுள்ளது என அமெரிக்காவின் மத்திய படை தெரிவித்து உள்ளது.

ஏமனில் மார்ச் மத்தியில் இருந்து இந்த தாக்குதல்களை அமெரிக்கா நடத்தி வருகிறது. ஏமனில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள், விமான நிலையங்கள் மற்றும் ராக்கெட் தளங்கள் மீதும் வான்வழி தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது.

செங்கடலில் கப்பல்களை மறித்து, தாக்கும் ஹவுதிகளை தடுத்து நிறுத்தும் இலக்கை அடைவதற்காக அதிக அளவில் படைகளை பயன்படுத்துவோம் என டிரம்ப் தெரிவித்த நிலையில் அமெரிக்காவின் தாக்குதல் தீவிரமடைந்து உள்ளது. எனினும், இஸ்ரேல் தாக்குதலை நிறுத்தும் வரை பாலஸ்தீனிய மக்களுக்கு ஆதரவாக நாங்களும் தாக்குதல் நடத்துவோம். ஆயுதங்களைகீழே போடமாட்டோம் என ஹவுதி தெரிவித்து உள்ளது.

## மதிமுகவிலிருந்து மல்லை சத்யாவை நீக்க வைகோ மறுப்பு கட்சிப் பதவியிலிருந்து துரை வைகோ விலகல்?



சென்னை, ஏப்.20

மதிமுகவின் நிர்வாக குழு நாளை கூடும் நிலையில் அக்கட்சியின் முதன்மைப் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து, பொது செயலாளர் வைகோ மகன் துரை வைகோ ராஜினாமா செய்துள்ளார்.

வைகோ தமது வலது கரமான மதிமுக துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யாவை கட்சிப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்ற துரை வைகோவின் நெருக்கடியை ஏற்க மறுத்ததால் தற்போது மதிமுக பிளவுபடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

வாரிசு அரசியலுக்கு எதிராக திமுகவில் இருந்து வெளியேறி மதிமுகவை தொடங்கியவர் வைகோ. அக்கட்சியில் பொதுச்செயலாளர் பதவிதான் அதிகாரமிக்கது. மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, ஒரு கட்டத்தில் மகன் துரை வைகோவை கட்சிக்குள் கொண்டு வந்து மதிமுகவின் முதன்மை செயலாளராக்கினார். மதிமுகவின் ஒரே ஒரு எம்பியாகவும் பதவி வகிக்கிறார் துரை வைகோ. மதிமுகவுக்குள் துரை வைகோ திணிக்கப்பட்டதற்கு எதிராக வைகோவுக்கு நெருக்கமான அனைத்து சீனியர்களும் எதிர்ப்பும் தெரிவித்தனர்.

இந்த எதிர்ப்பை வைகோ பொருட்படுத்தாமல் இருந்ததால் அவர்கள் மதிமுகவை விட்டே வெளியேறிவிட்டனர். இந்த விவகாரத்தில்தான் மதிமுகவின் மூத்த தலைவர்களில் ஒருவராக இருந்த கணேசமூர்த்தி தற்கொலை செய்து கொண்டதாகவும் கூறப்பட்டது.

மதிமுகவின் எஞ்சிய சீனியர், மல்லை சத்யா மட்டும்தான். அவரும் துரை வைகோவுக்கு தொடக்கம் முதலே எதிர்ப்பு தெரிவித்து வந்தார். மதிமுகவை விட்டு திமுகவுக்கு தாவும் முயற்சிகளையும் மல்லை சத்யா மேற்கொண்டார்.. ஆனாலும் வைகோ தந்த நெருக்கடியால், மல்லை சத்யாவை திமுக சேர்த்துக் கொள்ளவில்லை. இந்த பின்னணியில் துரை வைகோவின் கை மதிமுகவில் ஓங்கியது. துரை வைகோவின் ஆதரவாளர்கள் மதிமுகவின் முக்கிய பதவிகளில் அமர்த்தப்பட்டனர்.

இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். முதன்மை செயலாளர் பதவி விலகல் ஏன்? துரை வைகோ இது தொடர்பாக துரை வைகோ வெளியிட்ட அறிக்கையில், நான் தலைமைக் கழகச் செயலாளர் பொறுப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தான் அதை சகித்துக் கொள்ள முடியாமல் நான்கு ஆண்டுகளாக, கட்சிக்கும் தலைமைக்கும் தீராத பெரும் பழியை சுமத்தி சுகம் காணும் ஒருவர் மத்தியில் கட்சியின் ‘முதன்மை செயலாளர்“என்று தலைமைக் கழக பொறுப்பில் தொடர்ந்து பணியாற்றிட என் மனம் விரும்பவில்லை எனவே கழகத்தின் முதன்மை செயலாளர் பொறுப்பில் இருந்து என்னை விடுவித்துக் கொள்கிறேன்.

ஏப்ரல் 20 ஆம் தேதி நடைபெறும் நிர்வாக குழு கூட்டத்தில் பங்கேற்பேன். ஆனால் அதன் பிறகு தலைமைக் கழகத்தின் மிக முக்கிய முடிவுகள் மேற்கொள்ளும் கூட்டங்கள் எதிலும் கலந்து கொள்ள மாட்டேன். என்னால் இயக்கத்திற்கோ, இயக்க தந்தைக்கோ எள் முனை அளவு கூட சேதாரம் வந்து விடக்கூடாது என்று தான் இந்த முடிவை எடுத்து இருக்கிறேன். அதே நேரத்தில் மறுமலர்ச்சி திமுகவின் முதல் தொண்டனாக இருந்து கட்சிக்காக உழைப்பேன் என்பதை உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சி தொகுதி மக்கள் மகத்தான வெற்றி பெற செய்து தங்கள் பிரதிநிதியாக நாடாளுமன்றத்திற்கு என்னை அனுப்பி வைத்துள்ளார்கள். அந்த மக்களுக்காக ஒரு எம்பி என்ற வகையில் கண்ணும் கருத் துமாக கடமையாற்றுவேன். எப்போதும் போலஇயக்கத் தொண்டர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் அரணாகவும் சுக துக்கங்களில் பங்கேற்கும் தோழனாகவும் இருப்பேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஏழு ஆண்டுகளாக நான் மேற்கொண்ட முயற்சிகளை கழகத்தின் முக்கிய நிர்வாகிகள் தொடர வேண்டும்.

எந்த சூழ்நிலையிலும் நம் தலைவர் மனம் கலங்கி விடாமல் அவரைப் பாதுகாக்க வேண்டும் என்று இருகரம் கூப்பி கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

## சூயஸ் கால்வாய் மூலம் பெறப்படும் வருவாய் ரூ.34 ஆயிரம் கோடியாக சரிவு



கெய்ரோ, ஏப்.20

எகிப்தில் உள்ள சூயஸ் கால்வாய் அந்த நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால் இஸ்ரேல்காசா போரால் அந்த வழியாக செல்லும் இஸ்ரேல் தொடர்புடைய கப்பல்கள்மீது ஹவுதிகிளர்ச்சியாளர்கள் அடிக்கடி தாக்குதல் நடத்துகின்றனர்.

இதனால் அந்த பகுதியில் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக சூயஸ் கால்வாய் மூலம் பெறப்படும் வருவாய் சரிந்து சுமார் ரூ.34 ஆயிரம் கோடியாக குறைந்தது. முந்தைய ஆண்டு இது சுமார் ரூ.87 ஆயிரம் கோடியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## உச்சநீதிமன்ற தீர்ப்பை விமர்சித்த துணை ஜனாதிபதியுடன் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி சந்திப்பு



டெல்லி, ஏப்.20

தமிழ்நாடு அரசின் வழக்கில் ஆளுநர்கள் மற்றும் ஜனாதிபதிக்கு உத்தரவிட்டு உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை மிகக் கடுமையாக விமர்சித்திருந்த துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கரை, தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி டெல்லியில் சந்தித்து ஆலோசனை நடத்தினார். தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஆளுநர் ரவி ஒப்புதல் தராமல் கிடப்பில் போட்டார்.

இதனால் தமிழ்நாட்டில் ஆளும் திமுக அரசு, உச்சநீதிமன்றத்துக்கு போனது. உச்சநீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்து வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை அளித்தது. அந்த தீர்ப்பில் ஆளுநர்கள் மாநில அரசுக்கு கட்டுப்பட்டவர்கள்;

சட்டசபை மசோதாக்களுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் தர காலக்கெடு நிரணயிக்கப்பட்டது. இதேபோல மாநில அரசுகளின் மசோதாக்கள் மீதான ஜனாதிபதி முடிவுக்கும் காலக்கெடு நிர்ணயித்தது உச்ச நீதிமன்றம். இது மத்தியில் ஆளும் பாஜக அரசுக்கு மிகப் பெரும் பின்னடைவாக பார்க்கப்பட்டது.

இதனிடையே உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை மிகக் கடுமையாக விமர்சித்தார் துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கர். உச்சநீதிமன்றம், சூப்பர் நாடாளுமன்றமாக செயல்படுகிறதா? உச்சநீதிமன்றம் தமக்கான அதிகாரம் 142 வது பிரிவை அணு ஆயுத ஏவுகணையாக பயன்படுத்துகிறதா? என ஜெகதீப் தன்கர் கேள்வி எழுப்பி இருந்தார். இதற்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக முதல்வர்ஸ்டாலின் வெளியிட்டிருந்த அறிக்கையில், “அரசியலமைப்புச் சட்டத்தை நாம் ஏற்றுக்கொண்டு 75 ஆண்டுகள் கடந்துவிட்டன.

எதிர்க்கட்சி ஆளும் மாநிலஅரசுகளைச் சிதைத்து, பொதுக் கருத்தாடலில் வலதுசாரிக் கருத்துகளைத் திணிக்க முற்படும் தற்போதைய தீங்கானது ஆளுநர்கள், குடியரசுத் துணைத் தலைவர், அவ்வளவு ஏன் மாண்புமிகு குடியரசுத் தலைவர் உட்பட அரசியலமைப்புப் பதவிகளை அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதில் இருந்து முளைத்த ஒன்றாகும்.

மக்களாட்சியில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் அரசை நடத்தவேண்டும், அலங்கார நியமனப் பதவிகளில் அமர்ந்திருப்பவர்கள் அல்ல! எந்தத் தனிநப ரும், அது எத்தகைய உயர் பொறுப்பில் இருப்பவரானா லும் அவர் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும்.

இதைத்தான் மாண்பமை உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டி யிருக்கிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க அத்தீர்ப்பு தவறான வழிமுறையைச் சரிசெய்யும் நகர்வாகும். ஆகவே, இந்த வரவேற்கத்தகுந்த சீர்திருத்த நடவடிக்கை பல ஜனநாயக விரோத சக்திகளை நிலைகுலைய வைத்துள்ளதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

தற்போதைய தேவை என்பது, இந்தச் சீர்திருத்தம் முழுமையாக நடைமுறைத் தப்படுவதை உறுதிசெய்வதே எனவும் சுட்டிக்காட்டி இருந்தார். இந்த பின்னணியில் ஆளுநர் ஆர்.என். ரவிக்கு மத்திய அரசு சம்மன் அனுப்பி டெல்லிக்குவரவழைத்தது. தற்போது டெல்லியில் முகாமிட்டுள்ள ஆளுநர் ரவி பல்வேறு தரப்பினரைசந்தித்து பேசி வருகிறார். டெல்லியில் துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கரையும் ஆளுநர் ரவி சந்தித்து பேசியிருந்தார். நாட்டின் ஆளுநர்கள் கடமைகள் தொடர்பான உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் எனக் கூறப்படும் நிலையில் ஆளுநர் ரவியின் டெல்லி பயணம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

## பாகிஸ்தானில் நடப்பாண்டில் 1.75 லட்சம் பேர் வேலை தேடி வெளிநாடுகளில் தஞ்சம்



இஸ்லாமாபாத், ஏப்.20

பாகிஸ்தான் சமீப காலமாக கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கிறது. இதனால் பணவீக்கம் அதிகரித்து அத்தியாவசிய பொருட்களின் விலை தாறுமாறாக உயர்ந்தது. எனவே நடுத்தர மக்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டது.

இதனையடுத்து வாழ்வாதாரம் தேடி லட்சக்கணக்கானோர் அண்டை நாடுகளுக்கு வெளியேறினர். அதன்படி இந்த ஆண்டின் முதல் காலாண்டில் மட்டும் சுமார் 1.75 லட்சம் பேர் வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் சென்றுள்ளனர். அவர்களில் 1 லட்சத்து 20 ஆயிரம் பேருடன் சவுதி அரேபியா முதல் இடம் வகிப்பதாக பாகிஸ்தானின் குடியேற்ற துறை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள்
தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு:9443699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM

# வீட்டில் புகுந்து மூதாட்டியிடம் நகை, பணம் பறிப்பு

சென்னை, ஏப்.20

தமிழகத்தில் கடந்த மார்ச்மாதம் பிளஸ் 2, மற்றும் பிளஸ் 1 வகுப்புகளுக்கான பொதுத் தேர்வு தொடங்கி மார்ச் 28ம் தேதி வரை நடந்தது. அதற்கான விடைத்தாள்கள் திருத்துவதற்காக தமிழகத்தில் 80 மையங்கள் அமைத்து 40 ஆயிரம் ஆசிரியர்கள் மூலம் விடைத்தாள் திருத்தப்படுகின்றனர். இந்நிலையில் மார்ச் 28ம் தேதி முதல் பத்தாம் வகுப்பு தேர்வு தொடங்கி ஏப்ரல் 15ம் தேதி முடிந்தன. அதற்கான விடைத்தாள் திருத்தும் பணிகள் தற்போது தொடங்கியுள்ளது. இந்நிலையில், கடந்த ஆண்டில் தேர்வு முடிவுகள் வெளியான பிறகு விடைத்தாள் நகல் கேட்டு விண்ணப்பித்த மாணவ மாணவியர் தாங்கள் எழுதிய விடைகளுக்கு உரிய மதிப்பெண் வழங்கவில்லை என்று தெரிவித்து புகார்கூறினர்.

அது போன்ற நிலை இந்த ஆண்டில் வரக்கூடாது என்று தேர்வுத் துறை முடிவு செய்துள்ளது. அதற்காக தற்போது விடைத்தாள் திருத்தும் ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதல்களை தேர்வுத் துறை வழங்கியுள்ளது.

அதில், விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் விடைத்தாளில் மாணவர்கள் எழுதியுள்ள ஒவ்வொரு விடைகளையும் கவனமாக படித்துப் பார்த்து அதன்பிறகே உரியமதிப்பெண்வழங்க வேண்டும். கூடுதலாகவோ குறைவாகவோ மதிப்பெண் வழங்கக் கூடாது.

மேலும் மதிப்பெண்களை கூட்டி மொத்த மதிப்பெண் குறிப்பிடும் போதும் கவனமாக கூட்டல் செய்ய வேண்டும். வினாவாரி, பக்கவாரி மதிப்பெண் முதல் பக்கத்தில் எடுத்து எழுதும் போதும் கவனமாக எழுதி மொத்த மதிப்பெண்களை குறிப்பிட வேண்டும்.

அதில் தவறு ஏற்படாத வகையில் ஆசிரியர்கள் செயல்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டுதல்களை ஆசிரியர்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்று தேர்வுத்துறை அறிவுறுத்தியுள்ளது.

# பழனி தேவஸ்தானம் சார்பில் கல்லூரி தொடங்குவதை எதிர்த்த வழக்கில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்க முடியாது: சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஏப்.20

பழனி தேவஸ்தானம் சார்பில் தோப்பம்பட்டியில் தொடங்கபடவுள்ள கல்லூரி இந்து சமய அறநிலைய சட்டத்திற்கு புறம்பாக உள்ளது என்று உத்தரவிடக்கோரிய மனு மீது எந்த இடைக்கால உத்தரவையும் பிறப்பிக்க முடியாதுஎன்றுசென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இந்து சமய அறநிலையத்துறை சார்பில் பழனி முருகன் கோவில் உபரி நிதியிலிருந்து அறநிலையத்துறை சார்பில் கல்லூரி அமைக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் டி.ஆர்.ரமேஷ் என்பவர்இந்தகல்லூரிஅமைப்பதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அவர் தாக்கல் செய்த மனுவில், விதிமுறைகளுக்கு முரணாக கோவில் நிதியிலிருந்து கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது. எனவே, கல்லூரிக்கான கட்டிடப்பணிக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்தவழக்குநீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், சௌந்தர் மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, அறநிலையத்துறை சார்பில் ஆஜரான சிறப்பு அரசுவழக்கறிஞர்அருண் நடராஜன், இந்த கல்லூரி திறப்பதற்கு முறையான அரசாணை வழங்கபட்டுள்ளது. மேலும், சென்னை உயர்நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கில் வழங்கப்பட்டுள்ள இடைக்கால தீர்ப்பில், அறநிலையத்துறை சார்பில் திறக்கப்பட்டுள்ளநான்கு கல்லூரிகளில் சைவ சித்தாந்த பாடப்பிரிவுகள் நடத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் நான்கு கல்லூரிகளிலும் சைவ சித்தாந்த பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டு கடந்த மூன்று வருடங்களாக நடைபெற்று வருகிறது. என்று வாதிடப்பட்டது. பழனி கோவில் சார்பாகஅமைக்கப்படும் கல்லூரிக்கு கட்டுமானங்கள் நடைபெற்று வருகிறது. ஆகையால் தடை உத்தரவு பிறப்பிக்க கூடாது என்று வாதிட்டார். இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், விசாரணையை ஜூன் ஐந்தாம் தேதிக்கு தள்ளி வைத்தனர். அப்போது மனுதாரர் எதிர்ப்பு தெரிவித்த டி.ஆர்.ரமேஷ் இந்த வழக்கினை தள்ளுபடி செய்யுங்கள். உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யவுள்ளேன் என்றார்.

இதைக்கேட்ட நீதிபதிகள், டி.ஆர். ரமேஷ் உங்களின் போக்கு நீதிமன்றத்தை மிரட்டும் தொனியில் உள்ளது. இதற்கு நீதிமன்றம் பயப்படாது. இவ்வழக்கில் எந்த ஒரு இடைக்காலஉத்தரவும்பிறப்பிக்க முடியாது என்று தெரிவித்தனர்.

# ஜே.எம்.ஜே. மீடியா (PVT)LTD நடத்திய சர்வதேச கவிதைப் போட்டி - மாணவர்களின் எழுத்துத் திறனை ஊக்குவிக்கும் ஓர் அரிய முயற்சி




சர்வதேச கவிதை தினத்தை முன்னிட்டு, ஜே.எம்.ஜே. மீடியா (PVT)LTD நிறுவனம் மாணவர்களுக்கான கவிதைப் போட்டியை மிகச் சிறப்பாக நடாத்தியது. ஒவ்வொரு மாதத்திலும் வரலாற்று சிறப்புமிக்க தினங்களை சிறப்பிக்கின்ற

இந்த நிறுவனம் உலகளாவிய ஒருங்கிணைப்பாளர்களின் ஒத்துழைப்புடன் இந்தநிகழ்வையும் பல்வேறு நாடுகளில் ஒரே நேரத்தில் வெகு விமர்சையாக நடாத்தியது.

நிறுவனத்தின் பணிப்பாளர் தலைவி ஜஸூரா ஜலீல் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் போட்டியின் ஒவ்வொரு கட்டமும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. மாணவர்கள் தங்களது சொற்பண்பு மற்றும் கவிதை மிகு உணர்வுகளை வார்த்தைகளில் வடிவமைத்து தனித்துவமான படைப்புகள் உருவாக்கினர்.

இந்த போட்டியில் பங்கேற்ற பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் தங்களது எழுத்துத் திறனை வெளிப்படுத்தி போட்டியின் தரத்தை உயர்த்தினர். அவர்களின் படைப்புகள் மாணவர்களின் ஆழ்ந்த சிந்தனை, மொழிப்பிழைப்பு மற்றும் அவர்களது கலைப்பண்பை வெளிப்படுத்தினர்

போட்டியில் சிறப்பாக பங்கேற்று தங்களது திறமையை வெளிக்கொணர்ந்த மாணவர்களுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும், போட்டி வெற்றிக்காக உறுதுணையாக இருந்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும் நிறுவனம் தனது நன்றியை தெரிவித்தது.

ஜே. எம். ஜே மீடியாவின் செய்தியாளர் டி. மை. சாகிதா பானு இந்தியா, (தமிழ்நாடு ).

# மஞ்சள் ஒட்டுப்பொறி பற்றி கிள்ளிகுளம் வேளாண் கல்லூரி மாணவர்கள் செயல் விளக்கம்



கன்னியாகுமரி மாவட்டம் குருந்தன்கோடு வட்டாரத்திற்கு உட்பட்ட வெள்ளிமலை கிராமத்தில் முன்னோடி விவசாயிகளிடம் மாணவர்கள் மஞ்சள் ஒட்டுப்பொறி பற்றிய செயல்விளக்கத்தை கிராம விவசாயிகளுக்கு வழங்கினர்.

இந்த செயல் விளக்கத்தினை கிள்ளிகுளம் வ.உ.சி.வேளாண்மை கல்லூரியின் இறுதி யாண்டு மாணவர்களான கௌதம், பால முருகன் , சந்தீப், பாரதி, நிர்மல் பாரதி, அருண்குமார், கடம் வெங்கட சாய் கிருஷ்ணா, மர்ரி அருண் குமார், குமரன்ஆகியோர் விவசாயிகளுக்கு வழங்கினர்.

தென்னை பயிரினைத் தாக்கும் பூச்சிகளில் ருகோஸ் வெள்ளை ஈ குறிப்பிடத்தக்கது. வெள்ளை நிற ஈக்கள், குஞ்சுகள் இலைகளுக்கு பின்னால் இருந்து சாறு உறிஞ்சுகிறது. இவற்றின் மீது வெள்ளை நிற மெழுகு இருப்பதால் பார்ப்பதற்கு வெள்ளை நிற நூலாம் படை போன்றிருக்கும். இதற்குள் ஈக்களும், இளம் குஞ்சுகளும் காணப்படும். இலைகளுக்கு பின்புறம் சுருள் வடிவத்தில் முட்டையிட்டு பாதிப்பை ஏற்படுத்தி இனிப்பான திரவம் போன்ற கழிவை வெளியேற்றுகின்றன. கழிவின் மீது பூஞ்சாணம் வளர்வதால் இலைகள் கருப்பு நிறமாகி ஒளிச்சேர்க்கை பாதிக்கப்பட்டு மகசூல் குறைகிறது.

விளக்கெண்ணெய் அல்லது கிரீஸ் தடவப்பட்ட பாலிதீன் தாள்களை (நீளம் 3 அடி x அகலம் 1.5 அடி) ஏக்கருக்கு 20 வீதம் 6 அடி உயரத்தில் இரு மரங்களுக்கு இடையில் தொங்க விட்டும், தென்னைத் தண்டுப் பகுதியில்சுற்றியும்வெள்ளை ஈக்களைக் கவர்ந்து அழிக்கலாம் (ஒட்டும் திறன் குறையும் சமயத்தில் மீண்டும், மீண்டும் விளக்கெண்ணைய் அல்லது கீரீஸ் தடவி வரவேண்டும்). இந்த ஒட்டு பொறியானது ஸ்டிக்கர் வடிவிலும் பாலித்தீன் வடிவிலும்கிடைக்கிறது.

# ஈரோட்டில் முதியவரை கொல்ல முயற்சி; பொதுமக்கள் தாக்கியதில் காயமடைந்த வடமாநில இளைஞர் உயிரிழப்பு



ஈரோடு கொல்லம்பாளையம் பகுதியில் வீட்டில் தனியாக இருந்த முதியவரை கொல்ல முயற்சி செய்த வடமாநில இளைஞரைப் பிடித்து தாக்கிய பொதுமக்கள், அவரை போலீசில் ஒப்படைத்த நிலையில், அந்த இளைஞர் சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈரோடு மாவட்டம், கொல்லம்பாளையம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் சுப்பிரமணியம் ஜெயலட்சுமி தம்பதியினர் தனியாக வசித்து வருகின்றனர். ஓய்வு பெற்ற நடத்துனரான சுப்பிரமணியன் வீட்டிற்கு வியாழ க்கிழமை (17.04.2025) மதியம் ஒரு வட மாநில இளைஞர் வந்து கதவை தட்டி உள்ளார்.

அப்போது, முதிய தம்பதியினர் கதவை திறந்த போது, வீட்டிற்குள் வேகமாக புகுந்த அந்த இளைஞர் இருவரையும் தாக்கியதுடன், கத்தியால் சுப்பிரமணியின் கழுத்தை அறுத்து கொலை செய்ய முயற்சி செய்துள்ளார்.

இதனால்,முதியவர்கள் இருவரும் கத்தி கூச்சலிட்டதையடுத்து ஓடி வந்த அக்கம்பக்கத்தினர், அந்த இளைஞரை மடக்கிப் பிடித்தனர். அப்போது, முரண்டு பிடித்த இளைஞரை பொதுமக்கள் சரமாறியாகதாக்கினர். இதனால், அந்த இளைஞர் மயங்கி விழுந்தார்.

இது குறித்து தகவல் அறிந்து வந்த போலீசார் வட மாநில இளைஞரை மீட்டு சிகுச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துமனைக்கு அனுப்பி வைத்தனர்.

வட மாநில இளைஞர் தாக்கிஅதில் காயம் அடைந்த முதியவர் சுப்பிரமணி தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பொதுமக்கள் தாக்கியதில் மயக்கிய நிலையில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட வடமாநில இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்த வடமாநில இளைஞர் குறித்து போலீசார் நடத்திய விசாரணையில், அவர் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ராபி ஓரான் என்பது தெரியவந்தது. இது குறித்து ஈரோடு தெற்கு காவல் நிலைய போலீசார் வழக்குப் பதிவு செய்து, ராபி ஓரான் மீது தாக்குதல் நடத்தியவர்கள் யார் என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மதுரையில் வறுமையால் விபரீதம் குடும்பமே விஷம் குடிப்பு தாய், மகள் பரிதாப பலி: மகன் கவலைக்கிடம்

மதுரை, ஏப்.20

மதுரையில் வறுமை காரணமாக குடும்பத்துடன் விஷமருந்தியதில் தாய், மகள் உயிரிழந்த நிலையில், மகன் உயிருக்கு போராடி வருகிறார். மதுரை, அனுப்பானடி, தாய் நகரை சேர்ந்தவர் ஜெயராமன். சில ஆண்டுகளுக்கு முன்பு உயிரிழந்து விட்டார்.மனைவிஜீவகுமாரி. மகள்இன்பலட்சுமி(13), மகன் தனசிங்க பெருமாள்(10).கணவர்இறந்த பின்பு, ஜீவகுமாரி குடும்பம் நடத்த போதிய வருமானமின்றி பரிதவித்து வந்தார். வறுமை சூழல், கணவரை இழந்த விரக்தியால் தீவிர மன உளைச்சலில் இருந்து வந்தார்.

இவரது வீட்டில் விடிய விடிய வெகு நேரம் மின் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

இதனால் சந்தேகமடைந்த அக்கம்பக்கத்தினர் வீட்டிற்குள் சென்று பார்த்தபோது, ஜீவகுமாரி, இன்பலட்சுமி, தனசிங்க பெருமாள் ஆகிய மூவரும் மயங்கிக் கிடந்தனர். மகன், மகளுக்கு விஷம் கொடுத்து, ஜீவகுமாரியும் விஷமருந்தி இருந்தது தெரிந்தது. வீட்டிற்குள் மயங்கிக் கிடந்த மூவரையும் மீட்டு, மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தனர். இதில் ஜீவகுமாரி, இன்பலட்சுமி வரும் வழியிலேயே உயிரிழந்தனர். மகன் தனசிங்கபெருமாள் மதுரை அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் உயிருக்கு போராடி வருகிறார். இதன்பேரில் கீரைத்துறை போலீசார் வழக்குப்பதிந்து, தாய், மகள் தற்கொலைக்கு குடும்ப வறுமை காரணமா? அல்லது வேறு காரணம் உள்ளதா என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# போலீசாருக்கு வார விடுமுறை ஐகோர்ட்டில் வழக்கு



மதுரை, ஏப்.20

மதுரை, ஆஸ்டின்பட்டியைச் சேர்ந்த காவலர் செந்தில்குமார், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு: தமிழக காவல்துறையில் அதிக பணிச்சுமை இருப்பதாகவும், ஓய்வின்றி பணியாற்ற வேண்டி உள்ளதாகவும் காவலர்கள் தரப்பில் தொடர்ந்து புகார்கள் கூறப்பட்டு வந்தன. இதனால் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்கின்றனர். அவர்களது குறைகளை தீர்க்கும் வகையில் காவலர்கள் முதல் எஸ்ஐக்கள் வரை உள்ளவர்களுக்கு வார விடுமுறை வழங்க வேண்டும் என கடந்த 2021ம் ஆண்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இந்த அரசாணை நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே காவலர்கள் முதல் எஸ்ஐக்கள் வரை உள்ளவர்களுக்கு வார விடுமுறை வழங்க வேண்டும் என்ற அரசாணையை நடைமுறைப்படுத்த உத்தரவிட வேண்டும். இவ்வாறு கூறியிருந்தார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வர உள்ளது.

# அமைச்சர் சிவசங்கர் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் புதிய பேருந்து சேவைகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்




தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் புதிய பேருந்து நிலையம் மற்றும் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம் சங்குபுரம் ஊராட்சி ஆகிய பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே. கமல் கிஷோர் இ.ஆ.ப., அவர்கள், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி மரு.ராணிஸ்ரீ குமார் அவர்கள், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஈ.ராஜா அவர்கள், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.மரு.சதன்திருமலைக்குமார் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் புதிய பேருந்து சேவைகளை கொடியசைத்து துவக்கி வைத்து, சங்கரன்கோவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து பணிமனையில் தரைதளத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். நிகழ்ச்சியில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்திரு.எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள் தெரிவித்ததாவது, மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தனியார் பேருந்துகளை அரசுடைமையாக்கி பேருந்துகள் செல்லாத பகுதிகளுக்கும் பேருந்துகள் செல்ல வழி வகுத்து, போக்குவரத்து கழகத்தை நாட்டுடைமையாக்கியுள்ளார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட மகளிர், மாற்றுத்திறனாளிகள் உதவியாளர் மறறும் திருநங்கைகள் ஆகியோர் தமிழ்நாடு முழுவதும் சாதாரண கட்டண நகர பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்யும் விடியல் பயண திட்டம்" (08.05.2021) முதல் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. தென்காசி மாவட்டத்தில் தென்காசி, செங்கோட்டை, சங்கரன்கோவில், புளியங்குடி என 4 கிளைகள் செயல்பட்டு வருகிறது. இக்கிளைகளிலிருந்த 80 நகர பேருந்துகளும், 150 புறநகர பேருந்துகளும் என 230 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. இதில் 78 பேருந்துகள் மகளிர் விடியல் பயண பேருந்துகளாக இயக்கப்படுகிறது. தென்காசி மாவட்டத்தில் மகளிர் விடியல் பயண பேருந்துகளில் நாளொன்றுக்கு சராசரியாக 65,000 மகளிர் பயணம் செய்து, பயனடைந்து வருகின்றனர். இதனால் மகளிர்க்கு மாதம் ரூ.1000/ சேமிப்பாக உள்ளது. பெண்களுடைய வாழ்வில் இத்திட்டம் ஒரு புத்துணர்ச்சியை தந்துள்ளது. தென்காசி மாவட்டத்திற்க 2022 2023 ஆம் ஆண்டில் 65 புனரமைக்கபட்ட பேருந்துகளும், 20232024 ஆம் ஆண்டில் 39 புதியபேருந்துகளும் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு தடத்தில் இயக்கப்பட்டுள்ளது. 20242025 ஆம் ஆண்டில் 18 புதிய பேருந்துகள் ஒதுக்கீடு தடத்தில் இயக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி கோட்டத்தில் 813 நகர பேருந்துகளும், 794 புறநகர பேருந்துகளும் என மொத்தம் 1607 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. இதில் 662 மகளிர் விடியல் பயண பேருந்துகளாக இயக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திருநெல்வேலி கோட்டத்திற்கு 2022 2023 ஆம் ஆண்டில் 302 புனரமைக்கபட்ட பேருந்துகளும், 20232024 ஆம் ஆண்டில் 219 புதிய பேருந்துகளும் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு தடத்தில் இயக்கப்பட்டுள்ளது. 20242025 ஆம் ஆண்டில் 192 புதிய பேருந்துகள், 25 புதிய தாழ்தள பேருந்துகளும், 63 கூண்டு கட்டப்பட்ட புதிய பேருந்துகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டு 95 பேருந்துகள் கூண்டு கட்டப்பட்டு தடத்தில் இயக்கப்பட்டுள்ளது. இன்று புதியதாக 8 புதிய பேருந்துகள் இயக்கப் பட உள்ளது. மீதமுள்ள 89 பேருந்துகள் கூண்டு கட்டும் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் தடத்தில் இயக்கப்படும். 2025 2026 ஆம் ஆண்டிற்கு 224 புதிய பேருந்துகள், 107 புனரமைக்கப்பட்ட பேருந்துகள், 102 முகச்சீரமைப்பு பேருந்துகள் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுநாளது வரை மொத்தம் அரசால் திருநெல்வேலி கோட்டத்திற்கு 723 புதிய பேருந்துகள், 409 புனரமைக்கப்பட்டபேருந்துகள், 102 முகச்சீரமைப்பபேருந்துகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து, தசென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து பணிமனையில் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி நிதியிலிருந்து ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு தரைத்தளத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்திரு.எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இவ்விழாவில்,மேலாண் இயக்குநர் (தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,

திருநெல்வேலி) திரு. தசரதன், பொது மேலாளர் (தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி) திரு.சரவணன், சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் திருமதி. கவிதா, சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் திருமதி உமாமகேஸ்வரி, சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திரு.லாலா, சங்கர பாண்டியன், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திரு.பொன் முத்தையா பாண்டியன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வக்பு சட்ட திருத்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து நெல்லையில் கடைகள் அடைப்பு: ஆட்டோ, கார்களும் இயங்கவில்லை

நெல்லை, ஏப்.20


ஒன்றிய அரசின் வக்பு சட்ட திருத்த மசோதாவிற்கு பல்வேறு இஸ்லாமிய அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. நெல்லை மேலப்பாளையத்தில் இச்சட்ட திருத்த மசோதாவை திரும்பப் பெறக் கோரி அனைத்து கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்திற்கு மேலப்பாளையம் வணிகர்சங்கத்தினரும் ஆதரவு தெரிவித்து நேற்று கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் மேலப்பாளையம் முக்கிய வீதிகள், சந்தை பகுதிகளில் கடைகள் திறக்கப்படாமல் பூட்டப்பட்டிருந்தன.



சுமார் 1500 கடைகள் அடைக்கப்பட்டு இருந்தன. இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஆட்டோ மற்றும் கார் ஓட்டுநர்களும் நேற்று வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதனால் மேலப்பாளையத்தில் இருந்து பல்வேறு பகுதிகளுக்கு செல்லும் பொதுமக்கள் மற்றும் வெளியூர் பயணிகள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகினர். இதன்காரணமாக மேலப்பாளையம் பகுதியில் சாலைகள் வெறிச்சோடி காணப்பட்டன. இதனால் பொதுமக்கள் தங்களது அன்றாட தேவைகளுக்காக பொருட்கள் வாங்க முடியாமலும், போக்குவரத்து வசதி இன்றியும் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

## பைக் மீது மோதி விபத்து லாரியில் சிக்கி 12 கிலோ மீட்டர் தூரம் இழுத்துச் செல்லப்பட்ட வாலிபர் பலி





வாடிப்பட்டி, ஏப்.20

வாடிப்பட்டி அருகே பைக் மீது லாரி மோதியதில் அதில் சிக்கி 12 கிமீ தூரம் வரை இழுத்துச் செல்லப்பட்ட வாலிபர் பலியான சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மதுரை மாவட்டம், வாடிப்பட்டி அருகே வடுகபட்டியை சேர்ந்தவர் ஆனந்தன் மகன் சூரியபிரகாஷ் (30). வெளிமாநில லாரிகளுக்கு வழிகாட்டும் லாரி புரோக்கிங் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் இவர், நேற்று அதிகாலை வாடிப்பட்டியிலிருந்து வடுகபட்டிக்கு டூவீலரில் சென்று கொண்டிருந்தார். அப்போது திண்டுக்கல் – மதுரை நான்கு வழிச்சாலையில் ஆண்டிப்பட்டி பகுதியில், ஹரியானா மாநிலத்தில் இருந்து மதுரை நோக்கி சென்ற லாரி, டூவீலர் மீது பின்புறமாக மோதியது. இதில் சூரியபிரகாஷ் லாரியின் பக்கவாட்டில் இருசக்கர வாகனத்துடன் சிக்கிக் கொண்டார்.

இதனை அறியாத டிரைவர், சூரியபிரகாஷின் உடலுடன் சுமார் 12 கிமீ தூரம் வரை சமயநல்லூர் அருகிலுள்ள கட்டப்புளி நகர் வரை லாரியை ஓட்டிச் சென்றுள்ளார். அப்போது பின்புறமாக வந்த பிற லாரி ஓட்டுநர்கள் அதனை அறிந்து லாரியை மறித்து தகவல்களை கூறியபோது, ஹரியானா டிரைவர், லாரியை அப்படியே போட்டு விட்டு அங்கிருந்து தப்பி ஓடினார். பரிசோதனையில் சூரியபிரகாஷ் ஏற்கனவே உயிரிழந்தது தெரிந்தது. தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த சமயநல்லூர் போலீசார், சூரியபிரகாஷ் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திருப்பணிகள் முறையாக நடைபெற்றதா? தென்காசி கோயிலில் ஐஐடி குழு ஆய்வு



தென்காசி, ஏப்.20

ஐகோர்ட் உத்தரவையடுத்து தென்காசி காசி விஸ்வநாதர் கோயிலில் சென்னை ஐஐடி குழுவினர், வழக்கறிஞர் ஆணையத்தினர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். தென்காசியில் 15ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பழமையும், பெருமையும் வாய்ந்த 9 அடுக்கு ராஜகோபுரத்துடன் கூடிய காசி விஸ்வநாதர் கோயிலில் 19 ஆண்டுகளுக்கு பிறகு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 7ம் தேதி கும்பாபிஷேகம் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இதனிடையே முழுமையாக திருப்பணிகள் நடைபெறாமல் கும்பாபிஷேகம் நடத்தப்படுவதாக கூறி நம்பிராஜன் மற்றும் சிவபாலன் உள்ளிட்ட பலர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்தனர்.

இதில் நம்பிராஜன் தொடர்ந்த வழக்கில் உயர் நீதிமன்ற மதுரை கிளை கடந்த 3ம் தேதி பிறப்பித்த உத்தரவில், ஐஐடி குழுவினர் மற்றும் வழக்கறிஞர் ஆணையத்தினர் கோயிலை முறையாக ஆய்வு செய்து புணரமைப்புபணிகள்குறித்து முழுமையாக அறிக்கை சமர்ப்பித்த பின்னர் கும்பாபிஷேகம் நடத்தப்படவேண்டுமென இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது. மறுநாள் 4ம் தேதி அன்று உயர்நீதிமன்ற மதுரை கிளை, இடைக்கால தடையை ரத்து செய்து உத்தரவு பிறப்பித்தது. அதே நேரத்தில் ஐஐடி குழுவினர் மற்றும் வழக்கறிஞர் ஆணையத்தினர் ஆய்வு செய்வார்கள் என்று தெரிவித்திருந்தது.

இதையடுத்து, சென்னை ஐஐடி குழுவைச் சேர்ந்த அருண் மேனன், அனுசந்தானம் மற்றும் வழக்கறிஞர் ஆணையத்தின் சார்பில் ஆனந்த வள்ளி உள்ளிட்ட வழக்கறிஞர்கள் குழுவினர் காசி விஸ்வநாதர் கோயிலில் நடைபெற்ற திருப்பணிகள் மற்றும்புனரமைப்புபணிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். கோயிலின் ஒவ்வொரு பகுதியிலும் மேற்கொள்ளப்பட்ட பணிகள், அவற்றின் தரம் குறித்தும் ஆய்வு செய்தனர். இதைத்தொடர்ந்து இது குறித்த அறிக்கையை உயர்நீதிமன்றத்தில் அவர்கள் தாக்கல் செய்வர் என தெரிகிறது.

## விபத்தில் இறந்த எஸ்ஐ குடும்பத்திற்கு ரூ.1.40 கோடி நஷ்ட ஈடு

கடலூர், ஏப்.20

விபத்தில் இறந்த எஸ்.ஐ. குடும்பத்திற்கு ரூ.1.40 கோடி நஷ்ட ஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கடலூர் மாவட்டம் சிதம்பரம் தில்லைநாயகபுரம் கீழமூங்கிலடியை சேர்ந்தவர் செல்வம். சப்இன்ஸ்பெக்டராக பணிபுரிந்து வந்தார். கடந்த 2019ம் ஆண்டு டிசம்பர் 2ம் தேதி காரில் மனைவி ஸ்ரீதேவி பிரியா, மகள் ஜனனிஸ்ரீ ஆகியோரை அழைத்துக்கொண்டு சத்தியமங்கலம் – பண்ணாரி மெயின் ரோட்டில் புது வடவள்ளி பேருந்து நிறுத்தம் அருகே சென்று கொண்டிருந்தார்.

அப்போது எதிரே வந்த லாரி மோதியதில் சம்பவ இடத்திலேயே 3 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இது குறித்து சத்தியமங்கலம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இந்நிலையில், இறந்த சப்இன்ஸ்பெக்டர் செல்வத்தின் தாய் சகுந்தலா மற்றும் தந்தை முத்துசாமி ஆகியோர் நஷ்ட ஈடு கேட்டு சிறப்பு மாவட்ட நீதிமன்றம் எண் 1ல் மனு தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் உயிரிழந்த எஸ்.ஐ.க்கு குடும்பத்துக்கு ரூ.1 கோடியே 1 லட்சத்து 19 ஆயிரம் மற்றும் 7.5 சதவீதம் வட்டியுடன் சேர்த்து ரூ.1 கோடி 40 லட்சம் நஷ்ட ஈடு வழங்க நீதிபதி ஆனந்தன் சம்பந்தப்பட்ட இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு உத்தரவிட்டார்.

## டிஎன்பிஎஸ்சியால் தேர்வு செய்யப்பட்ட 25 இளநிலை உதவியாளருக்கு பணி நியமன ஆணை: அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்

சென்னை, ஏப்.20

டிஎன்பிஎஸ்சி வாயிலாக தெரிவு செய்யப்பட்ட 25 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 47 பண வசூலாளர்கள் பணி நியமன ஆணைகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில்நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அப்போது அவர் பேசுகையில், "கடந்த 4 ஆண்டு திமு.க ஆட்சி காலத்தில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் விதமாக இது வரை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தெரிவு செய்யப்பட்ட 87 இளநிலை உதவியாளர்கள், 112 பண வசூலாளர்கள், 11 சுருக்கெழுத்து தட்டச்சர்கள், 60 உதவிப் பொறியாளர்கள், 10 சமுதாய அலுவலர்கள், கருணை அடிப்படையில் 2 பணவசூலாளர்கள், 1 வரைவாளர் ஆக மொத்தம் 283 நபர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்" என்றார். இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா, வாரிய இணை மேலாண்மை இயக்குநர் க.விஜயகார்த்திகேயன், வாரிய செயலாளர் நா.காளிதாஸ், தலைமை பொறியாளர்கள் வி.எஸ்.கிருஷ்ணசாமி, சு.லால் பகதூர், உதவி செயலாளர் (நிர்வாகம்) அ.கிருஷ்ணவேனி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




## வேலூர் தேசிய நெடுஞ்சாலையில் விபத்து 30 அடி மேம்பாலத்தில் இருந்து தூக்கி வீசப்பட்ட தொழிலாளி பலி: கலெக்டர் நேரில் விசாரணை





வேலூர், ஏப்.20

வேலூர் சேண்பாக்கம் தேசிய நெடுஞ்சாலையில் 30 அடி உயர ரயில்வே மேம்பாலத்தில் இருந்து தவறிவிழுந்து தொழிலாளி பலியானார். ராணிப்பேட்டை உசேன் தெருவை சேர்ந்தவர் தமீம்தாவூத்(71). இவர் சேண்பாக்கத்தில் உள்ள பழைய இரும்பு கடையில் தொழிலாளியாக வேலை செய்து வந்தார். வழக்கம்போல் நேற்று காலை தமீம்தாவூத் பைக்கில் வேலைக்கு சென்று கொண்டிருந்தார். வேலூர் சேண்பாக்கம் ரயில்வே மேம்பாலத்தில் சென்றபோது பைக் திடீரென கட்டுப்பாட்டை இழந்து சாலையோர தடுப்பில் மோதியது. இதில் அவர், 30 அடி உயர மேம்பாலத்தில் இருந்து தூக்கிவீசப்பட்டு கீழேவிழுந்தார். மண்டை உடைந்து ரத்த வெள்ளத்தில் துடிதுடித்த அவர் அதே இடத்தில் இறந்தார். அப்போது குடியாத்தம் நிகழ்ச்சியில் பங்கேற்க வேலூர் கலெக்டர் சுப்புலட்சுமி மேம்பாலம் வழியாக சென்று கொண்டிருந்தார். விபத்து நடந்த இடத்தில் பொதுமக்கள் திரண்டிருந்ததால் உடனடியாக காரை நிறுத்தி அங்கு விசாரணை நடத்தினார். இதுகுறித்து வேலூர் வடக்கு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பெண்களுக்காக வழங்கப்பட்ட இளஞ்சிவப்பு ஆட்டோக்களை ஆண்கள் ஓட்டினால் கடும் நடவடிக்கை: சமூக நலத்துறை எச்சரிக்கை

சென்னை, ஏப்.19

பெண்களுக்காக வழங்கப்பட்ட இளஞ்சிவப்பு ஆட்டோக்களை ஆண்கள் ஓட்டினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சமூகநலத்துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பாக பயணம் செய்யும்வகையில் உதவி எண்களுடன், ஜி.பி.எஸ் கருவி பொருத்தப்பட்ட இளஞ்சிவப்பு ஆட்டோ சேவையை தமிழக அரசு கடந்த மாதம் அறிமுகம் செய்தது.

இத்திட்டத்தினை தொடங்கிவைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் முதற்கட்டமாக 165 பெண்களுக்கு இளஞ்சிவப்பு ஆட்டோக்களை வழங்கினார்.

குறிப்பாக ரூ.1 லட்சம் மானியம் மற்றும் வங்கி கடனுதவியுடன் இந்த ஆட்டோக்கள் பெண்களுக்கு வழங்கப்படுவதால் அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுவதற்கும் இத்திட்டம் வழிவகை செய்கிறது.

இந்த நிலையில் சென்னையில் இளஞ்சிவப்பு ஆட்டோக்களை சில ஆண்கள் தங்களின் வணிக ரீதியிலான போக்குவரத்து சேவைக்கு பயன்படுத்தி வருவதாக புகார்கள் எழுந்தன.

இதனையடுத்து சமூகநலத்துறை அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையில் மாநகரில் சிலர் இளஞ்சிவப்பு ஆட்டோவை ஆண்கள் ஓட்டுவது கண்டறியப்பட்டுள்ளது. மேலும், அவர்களிடம் அதிகாரிகள் நடத்திய விசாரணையில் உடல் நல குறைவு காரணமாக பெண் பயனாளிகள் ஆட்டோக்களை ஓட்டாத நாட்களில் அவர்களது கணவர் அல்லது உறவினர்கள் ஓட்டியது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆட்டோக்கள் அவர்கள் தான் ஓட்ட வேண்டும் என்ற விதிஇருப்பதால், இனி இது போன்ற தவறுகள் நடைபெறாமல் இருக்க வேண்டும் என்று மீறி ஆண்கள் இளஞ்சிவப்பு ஆட்டோக்களை ஓட்டினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

உடல் நலக்குறைவு காரணமாக பெண் பயனாளிகள் ஆட்டோக்களை ஓட்டாத நாட்களில் அவர்களது கணவர் அல்லது உறவினர்கள் ஓட்டியது தெரியவந்துள்ளது.

## லாரி மீது கார் மோதி 3 பேர் பரிதாப சாவு 3 பேர் படுகாயம்

வேடசந்தூர், ஏப்.20


லாரி மீது கார் மோதிய விபத்தில் 3 பேர் பலியாயினர். 3 பேர் படுகாயமடைந்தனர். திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுகா, தர்மபுரம் பகுதியை சேர்ந்தவர் சின்னப்பன் (34). டிரைவர். இவர் அதே பகுதியை சேர்ந்த தனது நண்பர்களான ஜான்கென்னடி, மின்வாரிய ஊழியர் அகஸ்டின் பிரபு, எலக்ட்ரிசீயன் ராபர்ட் (34), அற்புதராஜ் (30), மில்டன் ஜெயக்குமார் (32) ஆகியோருடன் புனித வெள்ளி பிரார்த்தனைக்காக கேரள மாநிலத்தில் உள்ள தோமையார் பேராலயத்திற்கு காரில் நேற்று முன்தினம் சென்றார். நேற்று மீண்டும் கேரளாவில் இருந்துசொந்தஊருக்கு திரும்பினர். மதியம் 2 மணியளவில் திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் ஒட்டன் சத்திரம் சாலையில் உள்ள அய்யனார் கோயில் அருகே கார் வந்து கொண்டிருந்தது. அப்போது எதிரே பஞ்சு மூட்டைகளை ஏற்றி சென்ற லாரி மீது கார் பயங்கரமாக மோதியது. இதில் காரின் முன் பகுதி நொறுங்கியது. இந்த கோரவிபத்தில் சின்னப்பன், அகஸ்டின் பிரபு, ராபர்ட் ஆகியோர் உயிரிழந்தனர். அற்புதராஜ், மில்டன் ஜெயக்குமார், ஜான் கென்னடி ஆகியோர் படுகாயமடைந்தனர்.



## காரிமங்கலம் அருகே டேங்கர் லாரி மீதுமோதி தனியார் பஸ் கவிழ்ந்ததில் அடியில் சிக்கி சிறுவன் பலி: 16 பயணிகள் படுகாயம்

காரிமங்கலம், ஏப்.20

காரிமங்கலம் அருகே டேங்கர் லாரி மீது மோதிய தனியார் பஸ் நிலைதடுமாறி கவிழ்ந்ததில் சாலையோரம் நின்றிருந்த சிறுவன் பலியானான். மேலும் 16 பயணிகள் படுகாயம் அடைந்தனர். கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில் இருந்து நேற்றிரவு 50 பயணிகளுடன் தனியார் பஸ் தர்மபுரி நோக்கி புறப்பட்டு வந்து கொண்டிருந்தது. அந்த பஸ்சை தர்மபுரி மாவட்டம் கூத்தப்பாடியை சேர்ந்த சேட்டு (50) என்பவர் ஓட்டி வந்தார். அந்த பஸ் காரிமங்கலம் அடுத்த பெரியாம்பட்டி பகுதியில் நேற்றிரவு 10 மணி அளவில் தேசிய நெடுஞ்சாலையில் இருந்து அதிவேகமாக ஊருக்குள் நுழைந்தது. அப்போது தர்மபுரியில் இருந்து கிருஷ்ணகிரி நோக்கி எதிரே வந்த டேங்கர் லாரியின் பக்கவாட்டின் மீது பஸ் மோதியது. இதில் கட்டுப்பாட்டை இழந்து நிலைதடுமாறிய பஸ் சாலையோரம் கவிழ்ந்தது. இதில் பேருந்தின் அடியில சிக்கி கன்னிப்பட்டி பகுதியை சேர்ந்த முத்துவேல் மகன் சூர்யா (17) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான். மேலும் அதே பகுதியைச் சேர்ந்த ரோகித்குமார், அன்பு ஆகியோர் படுகாயம் அடைந்தனர்.



மேலும் பஸ் டிரைவர் சேட்டு, அதில் பயணம் செய்த ரோஸ்லின் (17), நிஷாந்த் (24), லட்சுமி (43), சின்ன மணி (38), எஸ்தர் (31), மிதுன்குமார் (19), சூரியகலா (29), கமலேசன் (52), அமீர்ஜான் (54), முத்துக்குமார் (47), □தர்ஷன் (15) சாந்தா (35) நவீன்குமார் (37) ஆகியோர் படுகாயம் அடைந்தனர். இந்த தகவல் அறிந்து காரிமங்கலம் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். அவர்கள் காயம் அடைந்த 16பேரையும் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் தர்மபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்தில் பேருந்தின் அடியில் சிக்கி 3 டூவீலர்களும் சேதம் அடைந்தன. இந்த விபத்தால் தர்மபுரி – கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. விபத்து பற்றி காரிமங்கலம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சென்னை கடற்கரை-செங்கல்பட்டு இடையே ஏசி ரயில் இயக்கம்: தெற்கு ரயில்வே அறிவிப்பு

சென்னை, ஏப்.20

தமிழ்நாட்டின் முதல் ஏசி ரயில் சென்னை கடற்கரை செங்கல்பட்டுகடற்கரை இடையே இன்று முதல் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. பயணிகளின் வசதிக்காக தெற்கு ரயில்வேயின் சென்னை ரயில்வே கோட்டம் முதன் முறையாக இன்று சென்னை கடற்கரைசெங்கல்பட்டு சென்னை கடற்கரை இடையே முதல் குளிர்சாதன வசதி கொண்ட மின்சார ரயில் சேவையை இயக்குகிறது. இதில் நவீன ரேக், தானியங்கி கதவுகள், பயணிகள் தகவல் அமைப்புகள், சிசிடிவி கேமராக்கள், நன்கு குறிக்கப்பட்ட நுழைவு, வெளியேறும் புள்ளிகள் போன்ற பயணிகளுக்கு சிறந்த வசதிகளுடன் பொருத்தப்பட்டுள்ளது, முதல் குளிர்சாதன வசதி கொண்ட மின்சார ரயில் சேவை இன்று காலை 7 மணிக்கு சென்னை கடற்கரையிலிருந்து இயக்கப்படுகிறது.

அதன்படி குளிர்சாதன வசதி கொண்ட ரயில்எண் (49003, 49004) மற்றும் ரயில் எண் (49005, 49006) சென்னை கடற்கரை – செங்கல்பட்டு – சென்னை கடற்கரை குளிர்சாதன வசதி கொண்ட மின்சார ரயில் சேவைகள் ஞாயிற்றுக் கிழமைகள் தவிர இரு மார்க்கமாக இன்று முதல் இயக்கப்படுகிறது. சென்னை கடற்கரையில் இருந்து காலை 7 மணிக்கு புறப்பட்டு சென்னை கோட்டை, பூங்கா, எழும்பூர், மாம்பலம், கிண்டி, பரங்கிமலை, திரிசூலம், தாம்பரம், பெருங்களத்தூர், கூடுவாஞ்சேரி, பொத்தேரி, சிங்கபெருமாள் கோவில், பரனூர் ஆகியரயில்நிலையங்களில்நிறுத்தப்பட்டு காலை 8.35 மணிக்கு செங்கல்பட்டு ரயில் நிலையம் சென்றடையும் பின்னர் மறுமார்க்கமாக காலை 9 மணிக்கு புறப்பட்டு காலை 10.30 மணிக்கு சென்னை கடற்கரை வந்தடையும்.

அதேபோன்று சென்னை கடற்கரையில் இருந்து மதியம் 3.45 மணிக்கு புறப்பட்டு மாலை 5.25 மணிக்கு செங்கல்பட்டு சென்றடையும், மறுமார்க்கமாக 5.45 மணிக்கு புறப்பட்டு இரவு 7.15 மணிக்கு சென்னை கடற்கரைக்கு வந்தடையும். மேலும் இரவு 7.35 மணிக்கு புறப்படும் ரயில் கூடுதலாக சேத்துபட்டு, நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம், சைதாப்பேட்டை, மீனம்பாக்கம், பல்லாவரம், குரோம்பேட்டை, தாம்பரம் சானிடோரியம் வழியாக இரவு 8.30 மணிக்கு தாம்பரம் சென்றடையும்.

இவ்வாறு தெற்கு ரயில்வே வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தினகனி


Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

20.4.2025

# ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் சித்திரை திருவிழா கொடியேற்றம்: 26ம் தேதி தேரோட்டம்

திருச்சி, ஏப்20

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் சித்திரை திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் துவங்கியது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் வரும் 26ம் தேதி நடக்கிறது. பூலோக வைகுண்டம் என போற்றப்படுவதும், 108 வைணவத்தலங்களில் முதன்மையானதுமான திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் ஆண்டு முழுவதும் பல்வேறு விழாக்கள் நடைபெறுகிறது. இதில் விருப்பன் திருநாள் எனப்ப



டும் சித்திரை தேர் திருவிழா பிரசித்தி பெற்றது. இந்தாண்டு சித்திரை திருவிழா இன்று(18ம் தேதி) காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இதற்காக அதிகாலை 3.30 மணிக்கு வெள்ளி பல்லக்கில் மூலஸ்தானத்தில் இருந்து புறப்பட்ட நம்பெருமாள் கொடியேற்ற மண்டபம் வந்தடைந்தார். பின்னர், தங்க கொடிமரத்தில் உள்ள கொடி படத்திற்கு பட்டர்சுவாமிகள் மற்றும் அர்ச்சகர்கள் சிறப்புபூஜை செய்து, மீன லக்னத்தில் மேளதாளம் முழங்க கொடியேற்றப்பட்டது.

சித்திரை தேர் திருவிழா 11 நாட்கள் நடைபெற உள்ளது. விழாவையொட்டி தினமும் காலை நம்பெருமாள் பல்லக்கிலும், மாலை பல்வேறு வாகனங்களிலும் வீதியுலா நடைபெறும்.

வரும் 21ம் தேதி கருடசேவையும், 24ம் தேதி நம்பெருமாள் நெல் அளவு கண்டருளும் வைபவமும் நடக்கிறது.

25ம் தேதி நம்பெருமாள் தங்க குதிரை வாகனத்தில் வையாளி கண்டருளுகிறார். சித்திரைத் திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாக வரும் 26ம் தேதி காலை 6 மணியளவில் தேரோட்டம் நடைபெறுகிறது. 11ம் தேதி ஆளும் பல்லக்குடன் விழாநிறைவடைகிறது.

# புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அம்மா பேரவை சார்பில் சார்பில் மாபெரும் திண்ணைப் பிரச்சாரம் மற்றும் துண்டு பிரசுரம் வழங்கும் நிகழ்ச்சி

அறந்தாங்கி சட்டமன்ற தொகுதி அறந்தாங்கி தெற்கு ஒன்றிய புரட்சி தலைவி அம்மா பேரவை மற்றும் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அம்மா பேரவை சார்பில் சார்பில் மாபெரும் திண்ணைப் பிரச்சாரம் மற்றும் துண்டு பிரசுரம் வழங்கும் நிகழ்ச்சி



ஆளப்பிறந்தான் மற்றும் நாகுடி கடைவீதியில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், முன்னாள் வாரியத் தலைவர் பி. கே.வைரமுத்து Ex.MLA., அவர்கள் கழக விவசாய பிரிவுஇணை செயலாளர் கு.ராஜாமணி க்கம் ஆகியோரது தலைமையில் அறந்தாங்கி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் PM.பெரியசாமி அவர்கள், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் M.M.கணேசன் அவர்கள், முன்னிலையில் நடைபெற்றது.

அமைதி பூங்காவான தமிழ்நாட்டை அமளிக் காடாக மாற்றிய ஸ்டாலின் திமுக ஆட்சிக்கு முடிவு கட்டவும், கழக அரசின் சாதனை சரித்திரங்களை வாக்காள பெருமக்களை களத்திலே நேரில் சந்தித்து சாதனை விளக்க பிரசுரங்களை வழங்கி திண்ணை பிரச்சாரம் மேற்கொண்டனர்.

இதில் மாவட்ட துணை செயலாளர் M.ராஜநாயகம் Ex.MLA., மாவட்ட அம்மா பேரவை இணை செயலாளர் PM. சிவாஜி (எ) வைத்திலிங்கம், மாவட்ட மாணவரணி செயலாளர் பாகி. சுதாகர், மாவட்ட மகளிர் அணி செயலாளர் கலாராணி, மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணிசெயலாளர் பார்த்திபன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்..

# கல்லூரி மாணவர்கள் மோதலை தடுக்க குழு அமைக்க வேண்டும்: தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் பரிந்துரை

சென்னை, ஏப்.20

சென்னை மாநில கல்லூரி மாணவர் பச்சையப்பன் கல்லூரி மாணவர்களால் தாக்குதலுக்குள்ளாகி, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மரணமடைந்தார். இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட மாணவர்களுக்கு நிபந்தனை ஜாமின் வழங்கிய சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜெகதீஸ் சந்திரா மாணவர்கள் மோதலை அடுத்த ஆலோசனை வழங்க வேண்டும் என பிற கல்லூரி முதல்வர்களுக்கும், உயர் கல்வித்துறை அதிகாரிகளுக்கும், காவல்துறை அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவை அடுத்து காவல்துறை அதிகாரிகள் தாக்கல் செய்த அறிக்கையில், கடந்த 10 ஆண்டுகளில் 231 மாணவர்கள் தொடர்புடைய குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் உயர்கல்வித்துறை சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கை ஆகியவற்றை ஆய்வு செய்த நீதிபதி ஜெகதீஸ் சந்திரா கணித மேதை சீனிவாச ராமானுஜர், முன்னாள் முதல்வர் அறிஞர் அண்ணா உள்ளிட்ட பிரபலங்கள் பச்சையப்பன் கல்லூரியில் படித்துள்ளதாகவும், நோபல் பரிசு வென்ற சர் சிவி ராமன், மற்றும் பிரபல நீதிபதிகள் மாநில கல்லூரியில் படித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டி புகழ் பெற்ற இந்த கல்லூரிகளில் தற்போது மாணவர்கள் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது குறித்து வேதனை தெரிவித்து தீர்ப்பை வெளியிட்டுள்ளார்.

அதில், குற்றவாளிகள் பிறப்பதில்லை, உருவாக்கப்படுகிறார்கள் என கூறிய நீதிபதி கல்லூரி மாணவர்கள் மோதலில் ஈடுபடுவதை தடுக்க அறிஞர்கள், கல்வியலாளர்கள், மனநல ஆலோசகர்கள், கல்வித்துறை உயர் அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் அடங்கிய சிறப்பு குழுவை அமைக்க தமிழக அரசுக்கு பரிந்துரை வழங்கியுள்ளார். மாணவர்களை மோதலை அடுத்த பள்ளிகளில் அடிக்கடி பெற்றோர் ஆசிரியர் கூட்டங்களை நடத்த வேண்டும் என நீதிபதி வலியுறுத்தியுள்ளார்.

# அருள்மிகு ஸ்ரீ சந்தன மாரியம்மன் கோவிலில் பூக்குழி திருவிழா திரளான பக்தர்கள் தீ மிதித்து சுவாமி தரிசனம்

மதுரை ஊமச்சிகுளம் அருகே அமைந்துள்ள ஸ்ரீ சந்தன மாரியம்மன் கோவிலில் ஆண்டுதோறும் பங்குனி பூக்குழி திருவிழா நடைபெறுவது வழக்கம். அதேபோல 2025ம் ஆண்டு கடந்த ஏப்.11ந் தேதி பூக்குழி திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து தினமும் அலங்காரங்களில் சாமி ஊர்வலம் நடைபெற்றது.



இதனை தொடர்ந்து 8ம் நாள் திருவிழாவாக பூக்குழி திருவிழா நேற்று முன்தினம் (ஏப்.18) நடைபெற்றது. இவ்விழாவினை முன்னிட்டு கோவிலில் பக்தர்கள் அலகு குத்துதல், காப்பு கட்டுதல், பரவைக் காவடி உள்ளிட்ட நேர்த்திக் கடன்களை செலுத்தினர். பின்னர் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றது.

இதையடுத்து சந்தன மாரியம்மன் அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் வைக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டது. பின்னர் அம்மன் சப்பரம் வீதி உலா வந்து பூக்குழிதிடலை அடைந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

இதனை தொடர்ந்து பூக்குழியை சுற்றி செவ்வந்தி, பச்சை, அரளிப்பூ, ரோஜாப்பூ, தாமரை உள்ளிட்ட பூக்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தனர்.

இதில் ஊமச்சிகுளம் சுற்றி உள்ள கிராமத்தை சேர்ந்தவர்கள் பூக்குழி இறங்கி தங்களது வேண்டுதல்களை நிறைவேற்றினர். பாதுகாப்பு ஏற்பாடுகளை ஊமச்சிகுளம் காவல் ஆய்வாளர் சாந்தி பாலாஜி தலைமையில் போலீசார் ஈடுபட்டனர். விழாவில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை கமிட்டி நிர்வாகிகள், பொதுமக்கள் செய்திருந்தனர்.

# ஆதிபராசக்தி தோட்டக்கலை கல்லூரியைச் சேர்ந்த இறுதி ஆண்டு தோட்டக்கலை பட்டப்படிப்பு மாணவிகள் பங்கேற்ற சிறப்பு மனுநீதி நாள் முகாம்

இராணிப்பேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டத்திற்குட்பட்ட,திமிரி வட்டாரத்தில் ஆதிபராசக்தி தோட்டக்கலை கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு தோட்டக்கலை பட்டப்படிப்பு மாணவிகள் கிராமப்புற பணி அனுபவத் திட்டத்திற்காக வசித்து வருகின்றனர். கல்லூரி முதல்வர் டாக்டர். G. உமாபதி கிராமத் தோட்டக்கலைப் பணி அனுபவத் திட்ட ஒருங்கிணைப்பாளர் சி. சௌந்தர்யா அவர்கள் மற்றும் குழு ஒருங்கிணைப்பாளர் டாக்டர். மா. சின்னபாப்பா மேற்பார்வையில் இந்த திட்டம் மாணவிகளால் செயல்படுத்தப்படுகிறது. இதற்கிணங்க ஏப்ரல் 11 அன்று ஜி. கே. சுருதி மஹால், திமிரியில் தென்னை பற்றிய கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது. அதில் ஆதிபராசக்தி கல்லூரி மாணவிகளான துர்க்காவாணி, ஹரிணி, ஹேமமாலினி, ஜனனி, ஜீவிதா, ஜெனிஷா மற்றும் கல்பனாதேவி ஆகியோர் தோட்டக்கலை தொழில்நுட்பம் சார்பாக கண்காட்சி ஒன்று நடத்தினர்.

இந்நிகழ்வு தோட்டக்கலை துணை இயக்குனர் தலைமையில் நடைபெற்றது.

# இவானா நடிக்கும் 'சிங்கிள்' படத்தின் புதிய பாடல் வெளியீடு




நடிகர் ஸ்ரீ விஷ்ணு மற்றும் இளம் நடிகைகளான கெட்டிகா ஷர்மா மற்றும் இவானா ஆகியோர் நடித்து வரும் யூத் புல் ரொமாண்டிக் என்டர்டெய்னர் 'சிங்கிள்'. இப்படத்தை கார்த்திக் ராஜு இயக்குகிறார்.

இப்படம் அடுத்த மாதம் வெளியாக உள்ளது. இப்படத்தை கல்யா பிலிம்ஸ் பேனரின்கீழ் வித்யா கோப்பினிடி, பானு பிரதாபா மற்றும் ரியாஸ் சௌதர் ஆகியோர் தயாரிக்கின்றனர். சீதாராமம் புகழ் விஷால் சந்திரசேகர் இசையமைக்கிறார்.

இந்நிலையில், இப்படத்தின் 'சிர்ரகைந்தி' என்ற பாடல் வெளியாகி இருக்கிறது. மேலும், அனைத்து சிங்கிள்களுக்கும் இப்பாடல் சமர்ப்பணம் என்றும் படக்குழு தெரிவித்துள்ளது.

# ''குட் பேட் அக்லி' படத்தை பார்க்க நேரம் இல்லை' நடிகை லைலா



நடிகை லைலா, விஜயகாந்த் நடிப்பில் வெளிவந்த 'கள்ளழகர்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு அறிமுகமானார். அதனைத்தொடர்ந்து, பிதாமகன், நந்தா, உள்ளம் கேட்குமே போன்ற வெற்றிப்படங்களில் நடித்து பிரபலமானார்.

கடந்த ஆண்டு விஜய் நடிப்பில் வெளியான 'தி கோட்' படத்தில் நடித்த இவர், சமீபத்தில் ஆதி நடிப்பில் வெளியான 'சப்தம்' படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

இந்நிலையில், சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட நடிகை லைலா, வித்தியாசமான கதைகளில் நடிக்க ஆர்வமாக உள்ளதாக கூறினார். அவர் கூறுகையில்,

"நெகட்டிவ் கதாபாத்திரங்களை நானே தேர்வு செய்து நடித்தேன். திரில்லர், கிரைம் போன்ற கதையில் நடிக்க நான் ஆர்வமாகவே உள்ளேன். தற்போது 'என்கவுன்ட்டர்' என்ற வெப் தொடரில் நடித்து வருகிறேன். நேரம் இல்லாததால் இன்னும் குட் பேட் அக்லி படத்தை பார்க்கவில்லை" என்றார்.


# சமந்தா தயாரித்த முதல் படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு

தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் சமந்தா. சமீபத்தில் பாலிவுட்டில் வெளியான சிட்டாடல் தொடரில் நடித்திருந்தார். தற்போது மேலும் ஒரு வெப் தொடரில் நடித்து வருகிறார்.

இதற்கிடையில், சமந்தா சமீபத்தில் சொந்தமாக தயாரிப்பு நிறுவனம் தொடங்கினார். ட்ரலாலா மூவிங் பிக்சர்ஸ் என்ற இந்த நிறுவனத்தின் கீழ் சமந்தா "சுபம்" என்ற படத்தை தயாரித்திருக்கிறார். பிரவீன் காந்த்ரேகுலா இயக்கும் இப்படத்தில் பல புது முகங்கள் நடித்திருக்கின்றனர்.



சமந்தா தயாரித்த முதல் படம் என்பதால் இப்படத்தின் மீது மிகுந்த எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. இந்நிலையில், இபடத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இப்படம் அடுத்த மாதம் 9ம் தேதி வெளியாக உள்ளது.



# "ஊர்வசி ரவுத்தேலாவுடன் பணியாற்றியது மகிழ்ச்சி" ஜானி மாஸ்டர்

பிரபல தெலுங்கு இயக்குனர் கோபிசந்த் மலினேனி இயக்கத்தில், பாலிவுட் நடிகர் சன்னி தியோல் நடிப்பில் கடந்த 10ம் தேதி தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தியில் வெளியான படம் 'ஜாத்' ரெஜினா கசாண்ட்ரா, சயாமி கெர் , ஜெகபதி பாபு , ரம்யா கிருஷ்ணன் மற்றும் ரந்தீப் ஹுடா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ள இப்படம் ரூ.70 கோடிக்கும் மேல் வசூலித்திருக்கிறது. இப்படத்தில் 'டச் கியா' பாடலுக்கு நடிகை ஊர்வசி ரவுத்தேலா நடனமாடி இருந்தார். மிகவும் வைரலான இப்பாடலில் டேன்ஸ் மாஸ்டர் ஜானி நடன இயக்குனராக பணிபுரிந்திருந்தார். இந்நிலையில்,'டச்கியா'பாடலில்ஊர்வசிரவுத்தேலாவுடன்இணைந்துபணியாற்றியதில் மகிழ்ச்சி என்று ஜானி இணையத்தில் பகிர்ந்திருக்கிறார்.

# இந்த ஆடுகளத்தில் பேட்டிங் செய்வது அவ்வளவு எளிதாக இல்லை டிம் டேவிட் பேட்டி



ஐ.பி.எல். தொடரில் பெங்களூருவில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. மழை காரணமாக இந்த ஆட்டம் 14 ஓவர்களாக குறைக்கப்பட்டது. இந்த போட்டியில் முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு 14 ஓவரில் 9 விக்கெட்டை இழந்து 95 ரன்கள் மட்டுமே எடுத்தது. பெங்களூரு தரப்பில் டிம் டேவிட் 50 ரன் எடுத்தார். பஞ்சாப் தரப்பில் அர்ஷ்தீப் சிங், மார்கோ ஜான்சென், சாஹல், ஹர்ப்ரீத் ப்ரார் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். தொடர்ந்து 96 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பஞ்சாப் 12.1 ஓவரில் 5 விக்கெட்டை மட்டும் இழந்து 98 ரன்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பஞ்சாப் தரப்பில் அதிகபட்சமாக நேஹல் வதேரா 33 ரன் எடுத்தார். இந்த போட்டியின் ஆட்டநாயகன் விருது டிம் டேவிட்டுக்கு வழங்கப்பட்டது. இந்நிலையில், இந்த ஆட்டம் முடிவடைந்த பின்னர் டிம் டேவிட் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது, உண்மையிலேயே இந்த ஆடுகளத்தில் பேட்டிங் செய்வது அவ்வளவு எளிதாக இல்லை. டாப் ஆர்டரில் பேட்டிங் செய்த வீரர்கள் என்னிடம் வந்து மைதானத்தில் உள்ள சவாலை பகிர்ந்தனர்.

இந்த ஆடுகளத்தில் அப்படி என்ன நடக்கிறது என்பதை பார்த்தேன். பயிற்சியில் ஈடுபடும் பிட்ச் போன்றுதான் இந்த ஆடுகளமும் இருந்தது. இந்த ஆட்டத்தில் நான் சிறப்பாக விளையாடியதாக உணர்கிறேன். ஆனாலும் நான் ஆர்.சி.பி அணிக்காக முன்கூட்டியே டாப் ஆர்டரில் இறங்கினால் என்னுடைய மிகச்சிறப்பான பங்களிப்பை என்னுடைய அணிக்காக வழங்க முடியும் என்று நினைக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# பெங்களூருக்கு எதிரான வெற்றி... பஞ்சாப் கேப்டன் ஸ்ரேயாஸ் ஐயர் கூறியது என்ன..?




ஐ.பி.எல். தொடரில் பெங்களூருவில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. மழை காரணமாக இந்த ஆட்டம் 14 ஓவர்களாக குறைக்கப்பட்டது. இந்த போட்டியில் முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு 14 ஓவரில் 9 விக்கெட்டை இழந்து 95 ரன்கள் மட்டுமே எடுத்தது.

பெங்களூரு தரப்பில் டிம் டேவிட் 50 ரன் எடுத்தார். பஞ்சாப் தரப்பில் அர்ஷ்தீப் சிங், மார்கோ ஜான்சென், சாஹல், ஹர்ப்ரீத் ப்ரார் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். தொடர்ந்து 96 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பஞ்சாப் 12.1 ஓவரில் 5 விக்கெட்டை மட்டும் இழந்து 98 ரன்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பஞ்சாப் தரப்பில் அதிகபட்சமாக நேஹல் வதேரா 33 ரன் எடுத்தார். இந்த போட்டியின் ஆட்டநாயகன் விருது டிம் டேவிட்டுக்கு வழங்கப்பட்டது. இந்நிலையில், இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்ற பின்னர் பஞ்சாப் கேப்டன் ஸ்ரேயாஸ் ஐயர் அளித்த பேட்டியில் கூறியதாவது, பல்வேறு வகைகள் தான் வாழ்க்கையின் ருசி என்று சொல்வார்கள். அதுபோல இந்த மைதானத்தில் நாங்கள் நிறையப் போட்டிகளில் விளையாடிய அனுபவத்தைக் கொண்டுள்ளோம்.

அது நல்ல சவால். வித்தியாசமாக நான் எதுவும் சிந்திக்கவில்லை. எனது உள்ளுணர்வுகளை பின்பற்றி விக்கெட்டுகளை எடுக்க முயற்சி செய்தேன். புதிய பேட்ஸ்மேன் வந்து உடனடியாக செட்டிலாகி விளையாடுவதை நான் விரும்பவில்லை. மார்கோ யான்சென் பிட்ச்சில் எக்ஸ்ட்ரா பவுன்சை உருவாக்கி வேகமாக பவுலிங் செய்து எங்களுடைய வெற்றியை நிலை நிறுத்தினார். பவுலர்கள் அவருக்கு உதவி செய்தனர்.

பிட்ச் எப்படி இருக்கும் என்று தெரியாத நிலையில் எங்களுடைய பவுலர்கள் அதற்குத் தங்களை உட்படுத்திக் கொள்வார்கள் என்று நம்பினேன். கடினமான லென்த் பந்துகளை அடிப்பது கடினமாக இருப்பதாக அர்ஷ்தீப் என்னிடம் கூறினார். ஏனெனில், வேகப்பந்து வீச்சாளர்களுக்கு எதிராக நேராக சிக்சர் அடிக்க முடியவில்லை.

எனவே, அதை வைத்து நாங்கள் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தினோம். ஒரு பேட்ஸ்மேன் அதிரடியாக விளையாட வேண்டும். அதை இன்று எங்களுக்கு நேஹல் செய்தார். உயர்ந்த அணுகுமுறையில் விளையாடிய அவர் இப்படியே தொடர்வார் என்று நம்புகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.